# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## மதிப்பீட்டுத் தாள் 2022–2023

## வளர்தமிழ் 10

நேரம்: 180 மணித்துளிகள்

சுட்டெண்:

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. மொழிநூல்மூதறிஞர் எனச் சான்றோரால் சிறப்பிக்கப்பட்டவர்

அ) வீரமாமுனிவர் ☐ ஆ) தேவநேயப்பாவாணர் ☐

இ) கால்டுவெல் ☐ ஈ) பரிதிமாற்கலைஞர் ☐

2. வேங்கை மரத்தின் கீழ் நின்ற கண்ணகியைக் கோவலன் விண்ணுலகம் அழைத்துச் சென்றான். இங்கு வந்துள்ள பொதுமொழி

அ) கண்ணகி ☐ ஆ) மரம் ☐

இ) விண்ணுலகம் ☐ ஈ) வேங்கை ☐

3. பின்வருவனவற்றுள் வேறுபட்ட சொல்

அ) கவின் ☐ ஆ) எழில் ☐

இ) மலர் ☐ ஈ) அழகு ☐

4. அகராதி உருவாக்கத்தில் சிறந்த பங்களிப்பு வழங்கிய ஈழத்து அறிஞர்

அ) நா.சி. கந்தையா ☐ ஆ) பாவேந்தர் ☐

இ) காளமேகப்புலவர் ☐ ஈ) பாரதியார் ☐

5. சமக்கிருதம் தமிழில் ______________ என அழைக்கப்படுகிறது.

அ) தமிழ்மொழி ☐ ஆ) வடமொழி ☐

இ) ஆங்கிலமொழி ☐ ஈ) சிங்களமொழி ☐

6. வல்லின மெய்யெழுத்துகள் ஒலிக்கும் காலஅளவு

அ) 1 மாத்திரை ☐ ஆ) 1 1/2 மாத்திரை ☐

இ) 1/2 மாத்திரை ☐ ஈ) 2 மாத்திரை ☐

7. விற்கொடி __________ மன்னரது கொடியாகும்.

அ) சேர ☐ ஆ சோழ ☐

இ) பாண்டிய ☐ ஈ ) பாரி ☐

8. வடவரின் பழிப்புச் சொற்கேட்டு கொதித்தெழுந்த செங்குட்டுவனைச் சினம் தணிக என்றார் அமைச்சர். __________ செங்குட்டுவனோ சினந்தணியாது போர்முரசு அறைந்தான்.

அ) ஏனென்றால் ☐ ஆ) ஆகையால் ☐

இ) எனவே ☐ ஈ ) ஆனால் ☐

9. ஒலி வடிவில் மட்டும் அமைந்த ஊடகம்

அ) கணினி ☐ ஆ) தொலைக்காட்சி ☐

இ) வானொலி ☐ ஈ ) செய்தித்தாள் ☐

10. பார்ப்பு என்பதன் பொருள்

அ) பறழ் ☐ ஆ) குஞ்சு ☐

இ) குட்டி ☐ ஈ ) பிள்ளை ☐

11. "தென்திசை ஆண்ட தென்னவன் வாழி" எனப் பாண்டிய மன்னனைப் போற்றும் நூல்

அ) வளையாபதி ☐ ஆ) மணிமேகலை ☐

இ) சிலப்பதிகாரம் ☐ ஈ ) சீவகசிந்தாமணி ☐

12. " புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும்
உலகத்தை வேருடன் சாய்ப்போம்...." எனக் கூறியவர்

அ) ஔவையார் ☐ ஆ) பாவேந்தர் ☐

இ) கபிலர் ☐ ஈ ) பாரதியார் ☐

TEDC

13. "தண்டலை மயில்களாட.... " என்ற பாடலில் விளக்குகளாகத் தோன்றிய மலர்

அ) செந்தாமரை ☐ ஆ) குவளை ☐

இ) அல்லி ☐ ஈ) ஆம்பல் ☐

14. இடுகுறிப்பெயருக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) நாற்காலி ☐ ஆ) முள்ளி ☐

இ) மண்வெட்டி ☐ ஈ) வாள் ☐

15. வெள்ளை உடுத்தி மாணவர்கள் பள்ளிக்குச் சென்றனர். இது

அ) பொருளாகுபெயர் ☐ ஆ) குணவாகுபெயர் ☐

இ) இடவாகுபெயர் ☐ ஈ) சினையாகுபெயர் ☐

16. பார்த்தான் என்பதன் இடைநிலை

அ) பார் ☐ ஆ) ஆன் ☐

இ) த் ☐ ஈ) தான் ☐

17. காவிரியை ஓர் இளமங்கையாக உருவகித்துப் பாடியவர்

அ) கம்பர் ☐ ஆ) கமலக்கண்ணன் ☐

இ) பாவலர்முடியரசன் ☐ ஈ) இளங்கோவடிகள் ☐

18. தேவநேயப்பாவாணர் தமிழரது இறைநெறி ________ ச் செல்வாக்கினுள் வீழ்ந்ததால் வடமொழி வயமாயிற்று என நிறுவினார்.

அ) பறங்கிய ☐ ஆ) திராவிட ☐

இ) ஆரிய ☐ ஈ) ஐரோப்பிய ☐

TEDC

19. பொருட்களை எண்ணும் இடங்களில் இடப்படும் நிறுத்தற்குறி

அ) அரைப்புள்ளி ☐ ஆ) முக்காற்புள்ளி ☐

இ) முற்றுப்புள்ளி ☐ ஈ) காற்புள்ளி ☐

20. பின்வருவனவற்றுள் கெடுதல்புணர்ச்சி

அ) பாற்சோறு ☐ ஆ) புல்வெளி ☐

இ) வானவில் ☐ ஈ) தேனிசை ☐

21. குமரிக்கண்டத்தின் வடகோடியில் ஓடிய ஆறு

அ) பஃறுளி ☐ ஆ) குமரி ☐

இ) காவிரி ☐ ஈ) கங்கை ☐

22. கடைக்கழகம் அமைந்த இடம்

அ) கபாடபுரம் ☐ ஆ) தஞ்சாவூர் ☐

இ) மதுரை ☐ ஈ) தகடூர் ☐

23. போரில் வென்றவன் வெற்றிவாகை சூடினான். இதில் வினையாலணையும் பெயர்

அ) சூடினான் ☐ ஆ) வாகை ☐

இ) போர் ☐ ஈ) வென்றவன் ☐

24. கட்டுவித்தான் என்பதன் தன்வினை

அ) கட்டு ☐ ஆ) கட்டினான் ☐

இ) கட்டி ☐ ஈ) கட்டிய ☐

25. வாய்மொழி இலக்கியம் என அழைக்கப்படுவது

அ) பக்தி இலக்கியம் ☐ ஆ) அறநெறி இலக்கியம் ☐

இ) இறைநெறி இலக்கியம் ☐ ஈ ) நாட்டார் இலக்கியம் ☐

26. தமிழரது தாயகம் தமிழகமும் தமிழீழமும் ஆகும். இச் சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை

அ) மூன்றாம் வேற்றுமை ☐ ஆ) நான்காம் வேற்றுமை ☐

இ) ஐந்தாம் வேற்றுமை ☐ ஈ ) ஆறாம் வேற்றுமை ☐

27. நடனக்குலப் பெண்கள்

அ) விறலியர் ☐ ஆ) கூத்தர் ☐

இ) பாடினி ☐ ஈ ) பாணன் ☐

28. ஐ என்ற ஓர் எழுத்துச் சொல் குறிப்பது

அ) தலைவியை ☐ ஆ) தலைவனை ☐

இ) மகனை ☐ ஈ ) தோழனை ☐

29. குமரிக்கண்ட மாந்தனின் நனிமிகுபுலனாட்சியை இலக்கியங்கள் ________ எனக் கூறுகின்றன.

அ) இலெமூரியா ☐ ஆ) சிற்றறிவு ☐

இ) நெற்றிக்கண் ☐ ஈ ) ஐம்பூதம் ☐

30. உயர்திணை பலர்பால் முன்னிலை வினைமுற்று

அ) வந்தனர் ☐ ஆ) வந்தீர்கள் ☐

இ) வந்தன ☐ ஈ ) வந்தோம் ☐

புள்ளிகள் 30



TEDC

2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

அரசன் ஒருவன் தன் மக்களிடம் ''அமைதி என்றால் என்ன?'' என்பதை விளக்கும் வகையில் ஓவியமாக வரைந்து கொடுப்பவர்களுக்கு மிகச்சிறந்த பரிசு வழங்கப்படும் என்று அறிவித்தான். இதையடுத்து நாட்டின் முன்னணி ஓவியர்கள் அமைதியை வெளிப்படுத்தும் வகையில் பல ஓவியங்களை வரைந்து அரண்மனைக்குக் கொண்டு வந்தனர். அரசன் ஒவ்வொரு ஓவியமாகப் பார்த்துக் கொண்டே வந்தான். அழகிய மலையின் அடிவாரத்தில் ஓர் ஏரி இருப்பது போல் ஓவியம் ஒன்று இருந்தது. அது மிகவும் சிறப்பாக இருந்தது. பார்த்த உடனே பறிக்கத் தூண்டும் வகையில் வரையப்பட்ட மலர்களின் ஓவியம் ஒன்றும் இருந்தது. இப்படி ஒவ்வொருவரும் தங்கள் எண்ணத்தில் தோன்றியதை ஓவியமாக வெளிப்படுத்தி இருந்தனர். ஓர் ஓவியத்தில் ஒரு மலைமேல் இருந்து ஆர்ப்பரித்துக் கொட்டும் அருவியின் படம் வரையப்பட்டிருந்தது. அந்த ஓவியம் அரசனைக் கவர்ந்தது. அதிலேயே இடியோடு மழை கொட்டிக் கொண்டு இருந்தது. சற்று உற்றுப் பார்த்தால் அருவியின் கீழுள்ள மரத்தில் பறவை ஒன்று தனது குஞ்சுகளோடு கூட்டில் இருந்தது. ''இந்த ஓவியத்தை வரைந்தது யார்?'' என்று அரசன் கேட்டான். அந்த ஓவியர் வந்தார். ''இந்த ஓவியத்தில் அமைதி எங்கே இருக்கிறது?'' என்றான் அரசன். அதற்கு ஓவியர் மன்னா! ''சிக்கலும் போராட்டமும் ஆரவாரமும் இல்லாத இடத்தில் இருப்பது அமைதி அன்று. இவை எல்லாம் இருக்கும் இடத்தில் இருந்தும், எதற்கும் கலங்காமலும், தன்னை எதுவும் பாதிக்க விடாமலும் உள்ளுக்குள் அமைதியாக இருப்பதே உண்மையான அமைதி'' என்றார்.

1. ஓவியர்கள், தாம் வரைந்த ஓவியங்களை எங்கே கொண்டு வந்தனர்?

2. அரசனைக் கவர்ந்த ஓவியத்தில் வரையப்பட்டிருந்த காட்சிகள் எவை?

3. அரசன் எதனை விளக்கும் வகையில் ஓவியம் வரையுமாறு அறிவித்தான்?

4. உண்மையான அமைதி எதுவென ஓவியர் கூறுகிறார்?

5. தரப்பட்டுள்ள பந்திக்குப் பொருத்தமான தலைப்பை எழுதுக.

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. இமயவரம்பன் என அழைக்கப்பட்ட சேரமன்னன் யார்?

2. குமரிக்கண்டத்தில் ஏற்பட்ட கடற்கோளின் விளைவால் உருவாகிய நாகரிகம் எது?

3. செம்மொழிக் கோட்பாடுகளில் ஒன்றைத் தருக.

4. மருதநிலத்தில் யாழிசை போல் முரல்பவை எவை என கம்பர் கூறுகின்றார்?

5. ''நாங்கள் வாழ்நாளில் காணாத காட்சியொன்றைக் கண்டோம்.
   எந்நாட்டவளோ? யார்மகளோ? அறியோம்'' என்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது.

6. ''கொண்டல்கள் முழவி னேங்க
   குவளைகண் விழித்து நோக்க.....'' என்ற பாடல் வரிகளின் கருத்தை உமது மொழிநடையில் எழுதுக.

7. தேவநேயப்பாவாணரது ஆய்வுகளால் உலகுக்கு உணர்த்தப்பட்டவை எவை?

TEDC

புள்ளிகள் 10

**4. பின்வரும் கவிதைத் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

TEDC

1. அப்பா

2. கதிரவன்

TEDC

புள்ளிகள் 10

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

TEDC

மதிப்புக்குரிய ஆசிரியருக்கு,

நான் நலமே உள்ளேன். நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? உங்களால் எனக்கு ஊட்டப்பட்ட கல்வியறிவு என் மேற்படிப்புக்கு மிகவும் உதவியாக உள்ளது. நீங்கள் அடிக்கடி கூறுவது, ''மாணவர்களாகிய நீங்கள் உங்கள் கடமையை அறிந்து பொறுப்பை உணர்ந்து கருத்துடன் செயற்படுங்கள். அப்போதுதான் உங்களை உலகம் மகிழ்ந்து பாராட்டும்.'' நீங்கள் கூறியபடியே நான் நடக்கின்றேன். எனக்கு இங்கு கற்பிக்கும் ஆசிரியர்களையும் மிகவும் பிடிக்கும். இன்று நான் வகுப்பில் தமிழீழத்தின் போராட்ட வரலாறு பற்றிப் படித்தேன். பாடமுடிவில் மாணவர்கள் எல்லோராலும் தமிழ் வளர்க! தமிழீழம் வெல்க! என்று உரக்கக் கூறப்பட்டது.

என்றும் உங்கள் மாணவன்

ஈழவன்

1. பொதுமொழி ஒன்று தருக.

_______________________________________________

2. வியங்கோள் சொல்லியம் ஒன்று தருக.

_______________________________________________

3. நான்காம் வேற்றுமையுருபு ஏற்ற சொற்கள் இரண்டு எழுதுக.

_______________________________________________

4. செயப்பாட்டுவினை ஒன்று எழுதுக.

_______________________________________________

TEDC

5. வினாச் சொல்லியம் ஒன்று தருக.

_______________________________________________

புள்ளிகள் 10

**ஆ) 1. வேற்றுமை உருபையும் அது எத்தனையாம் வேற்றுமை என்பதையும் கண்டறிந்து எழுதுக.**

| **சொல்லியங்கள்** | **உருபு** | **வேற்றுமை** |
| --- | --- | --- |
| மாறனால் கவிதை வாசிக்கப்பட்டது. | | |
| தாய் மகனை அழைத்தார். | | |
| பாவேந்தரது பாடல்கள் பகுத்தறிவுள்ளவை. | | |

புள்ளிகள் 03

**2. தரப்பட்ட சொல்லியங்களின் தோன்றா உறுப்புகளையும் சொற்களையும் கண்டறிந்து எழுதுக.**

| **சொல்லியங்கள்** | **தோன்றா உறுப்பு** | **சொல்** |
| --- | --- | --- |
| ஆசிரியர் நன்றாகக் கற்பித்தார். | | |
| நேற்று கடுங்காற்று | | |

புள்ளிகள் 02

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

பெரிது உதவாது அடிமேல் சிறுதுரும்பும்

உதவும் வல்லவனுக்குப் சிறிதானாலும் அடித்தால்

கடுகு தூரத்துத் பல்லுக்குத்த அடி ஆயுதம்

தண்ணீர் காரம் அம்மியும் நகரும்

புல்லும் ஆபத்துக்கு

1. அற்ப பொருளையும் இகழாது பேணுதல் வேண்டும்.

______________________________

2. விடாது முயன்றால் வெற்றி கிடைக்கும்.

______________________________

3. சிறிதெனினும் சிறப்புண்டு.

______________________________

4. கைக்கெட்டாதது பயனற்றது.

______________________________

5. திறமையின் ஆற்றல்.

______________________________

புள்ளிகள் 05

TEDC

## 7) பந்தியை உமது வாழிடமொழியில் மாற்றி எழுதுக.

காலையில் கீழ்வானில் கதிரவன் எழுகின்றான். பொன்னிறக் கோளம்போல அவன் தோன்றுகிறான். அவனது பொன்னொளி உலககெங்கும் பரவுகின்றது. இருள் மறைகின்றது. மரஞ்செடிகொடிகளும் பிற பொருட்களும் தெளிவாகத் தெரிகின்றன. பறவைகளும் விலங்குகளும் மகிழ்ச்சி அடைகின்றன. மக்கள் புதியதொரு நாளைக் கண்டு களிப்படைந்து தத்தம் வேலைகளைச் செய்யத் தொடங்குகின்றனர்.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

TEDC

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ✸ சேரமான் வஞ்சினம்
- ✸ இயற்கை இன்பம்
- ✸ நான் கண்ட கனவு
- ✸ இயற்கைச் சூழலும் மரம் நடுதலும்

TEDC

புள்ளிகள் 15

தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

TEDC